2018 ஜூலை 3]

அந்தக் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என்று பிரித்து, உரம் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி நல்ல கேள்வியாகும். மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று கண்டிப்பாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று அனைத்துப் பகுதிகளிலுள்ள பொது மக்களுக்கும் வலியுறுத்தப்பட்டு, அவற்றைப் பிரித்து சேகரிக்க நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் அதுபோன்ற சூழ்நிலை இருக்கிறது. வேலூர் மாநகராட்சி போன்ற மாநகராட்சிகளில் மிகப் பெரிய இடப் பிரச்சினை வந்தபோது, இந்தத் திட்டத்தை வேகப்படுத்தி, செயல்படுத்த எல்லோரும் முன்வந்தனர். ஆதலால், அதுபோன்ற இடங்களில் இத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், கூடிய விரைவில், இத்திட்டத்தை துறை ரீதியாக ஆய்வு செய்து, வேகமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 254, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

254—

கலைக் கல்லூரி

***1823—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, ராயக்கோட்டையில் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேப்பனஹள்ளி தொகுதியிலுள்ள ராயக்கோட்டையில் அரசு கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ராயக்கோட்டையானது வளர்ந்து வருகின்ற ஒரு நகரமாகும். அது அதிகளவில் விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். ராயக்கோட்டையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி உள்ளன. அங்கே இரண்டு தனியார் மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. ராயக்கோட்டையைச் சுற்றியுள்ள அலேசிபம், உள்ளுகுறுக்கி, ஏனுசோனை போன்ற பகுதிகளிலுள்ள மாணவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் படித்து வருகின்றனர். இதில் ராயக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 220 பேரும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 240 பேரும், தனியார் பள்ளிகளில் 200 பேரும், உள்ளுகுறுக்கியில் 150 பேரும், அலேசிபத்தில் 160 பேரும், ஏனுசோனையில் 145 பேரும் படித்து வருகின்றனர். குறிப்பாக ராயக்கோட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இந்த ஆண்டு மட்டும் தேர்ச்சி சதவிகிதம் 95 சதவிகிதமாகும்; ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 92 சதவிகிதமாகும். ஆகவே, அவர்கள் உயர்கல்வி படிப்பதற்குச் செல்ல வேண்டுமென்றால் 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஒசூர் அல்லது கிருஷ்ணகிரி அல்லது காரிமங்கலம் போன்ற பகுதிகளுக்குத்தான் செல்ல வேண்டும். ஆகவே, இந்தப் பயண தூரத்தைக் கருத்தில்கொண்டு அப்பகுதிகளிலுள்ள பெற்றோர்கள் பெண் குழந்தைகளை படிக்க வைக்காமல் திருமணம் செய்து வைத்துவிடுகின்றனர் அல்லது* garments *நிறுவனங்களுக்கு வேலைக்கு அனுப்பிவிடுகின்றனர். ஆகவே, ராயக்கோட்டையில் அவசியமாக ஓர் அரசு கலை மற்றும்*

2018 ஜூலை 3]

அறிவியல் கல்லூரியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற ராயக்கோட்டை பகுதி கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்திருக்கிறது. ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தருமபுரி, கிருஷ்ணகிரி என இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அதற்கு முன்பாக கிருஷ்ணகிரியில் ஒரேயொரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மட்டும் 1964 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, இயங்கிக் கொண்டிருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் மூன்று கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டன என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேவேளையில், அந்த மாவட்டத்தில் ஒரு பொறியியல் கல்லூரியையும், மூன்று பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளையும். உருவாக்கி, உயர் கல்வி பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

முற்பகல் 10-30

இன்றைக்கு அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 4 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே கிருஷ்ணகிரியிலே ஓர் ஆடவர் கல்லூரி, ஒரு மகளிர் கல்லூரி, பர்கூரிலே ஒரு மகளிர் கல்லூரி, ஓசூரிலே புதிதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி என இருபாலர் பயிலும் கல்லூரியும் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. மேலும், இந்த 4 கல்லூரிகளுக்கும் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 2,811 ஆகும். அதில், கடந்த 2017-2018 ஆம் கல்வி ஆண்டில் 2,546 மாணவர்கள் மட்டும் சேர்ந்திருக்கின்றனர். அங்கே 265 இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அனைவரும் உயர் கல்வியில் சேருவதற்குண்டான வாய்ப்பை மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது உருவாக்கித் தந்திருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே இருக்கின்றவர்கள் ஓசூர், கிருஷ்ணகிரி, காரிமங்கலம் ஆகிய பகுதிகளுக்கு 30 கிலோ மீட்டர் தூரம் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது பேசுகின்றபொழுது சொன்னார். பாலக்கோட்டில் கடந்த ஆண்டு புதிதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 8 பாடப் பிரிவுகளோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மேலும் கூடுதலாக 4 பாடப் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. 12 பாடப் பிரிவுகளோடு பாலக்கோடு தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 20 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள இக்கல்லூரியில் ராயக்கோட்டையைச் சார்ந்த மாணாக்கர்கள் அதிக அளவில் சேர்ந்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேவேளையில் இன்றைக்கு ஓசூரிலே தொடங்கப்பட்ட புதிய கல்லூரி 10 இளநிலைப் பாடப் பிரிவுகளோடு நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டும் 2 பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஓசூருக்கு முதுநிலை பாடப் பிரிவுகள் 2 வழங்கப்பட்டுள்ளன. அதேபோல, M.Phil.*-க்கு 2 பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன.* Ph.D.*-ல் 2 பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதிக்குட்பட்ட ராயக்கோட்டை பகுதியில் இருக்கக்கூடிய உயர் கல்வி பெற வேண்டுமென்று எண்ணுகின்ற மாணாக்கர்கள் அத்தனைபேருமே பயன்பெறும் வகையிலே, அனைவருக்கும் உயர் கல்வி தருகின்ற வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே நடக்கக்கூடிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான அரசானது வழிவகை செய்திருக்கிறது. ஆகவே, ராயக்கோட்டையில் புதிதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைக்கும் நிலை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

2018 ஜூலை 3]

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கல்லூரிகளுமே நம்முடைய அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலேயே உள்ளன. எங்கள் தொகுதிக்கும் வேண்டுமென்றுதான் நாங்கள் கேட்கிறோம். சூளகிரியானது கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் என்னுடைய வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு மையப் பகுதியாகும். சுற்றுப் பகுதிகளான வேப்பனஹள்ளி, சூளகிரி, அத்திமுகம், பேரிகை ஆகிய இடங்களில் அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அதேபோல, ஏனுசோனை, உத்தனஹள்ளி, இம்மிடிநாயக்கனபள்ளி போன்ற இடங்களில் அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. தனியார் பள்ளிகள் 4 உள்ளன. அந்தப் பகுதிகளிலே குறைந்தபட்சம் 2,000 மாணவர்களுக்கும் மேலாக படித்து வருகிறார்கள். ஆகவே, எங்கள் தொகுதிமீதும் கவனம் செலுத்தி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் என்னுடைய வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்கும் மையப் பகுதியான சூளகிரியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எல்லாமே என்னுடைய தொகுதியில் இருக்கிறதென்று சுட்டிக்காட்டியது தவறான தகவல். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வேப்பனஹள்ளி தொகுதியானது புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதி. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓசூரிலே புதிதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவக்கி வைத்திருக்கிறார்கள். அவருடைய ராயக்கோட்டை பகுதியிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்திலே கெலமங்கலத்திலே ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியானது தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய தொகுதி எல்லையும், என்னுடைய தொகுதி எல்லையும் அருகருகே இருக்கிறது. பாலக்கோட்டில் புதிதாக ஒரே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மட்டும்தான் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு பாலக்கோட்டிலே இடம் இல்லாத காரணத்தினால் 8 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கக்கூடிய*

இடத்திலே அந்தக் கல்லூரியைத் தோற்றுவிக்கும்பொழுது அவருடைய ராயக்கோட்டை பகுதிக்கு அது அருகில் இருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டினேன். ஆகவே, அந்த மாணாக்கர்கள் அனைவரும் சேருவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றன. ராயக்கோட்டை பகுதியிலிருந்து எந்தப் பக்கம் போனாலும் 4 கல்லூரிகள் இருக்கின்றன. 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு மிகாமல் இரண்டு கல்லூரிகள் இருக்கின்றன. 20 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு கல்லூரி இருக்கிறது. ஓசூரில் 35 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. கெலமங்கலத்தில் 18 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ராயக்கோட்டை பகுதியிலே இருக்கக்கூடிய மாணாக்கர்கள் அத்தனைபேருமே உயர் கல்வி பெறுவதற்குண்டான வாய்ப்பை அரசு உருவாக்கித் தந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு வேப்பனஹள்ளி தொகுதி, ஓசூர் தொகுதி மற்றும் அந்தப் பகுதிகளில் இருக்கின்றவர்கள் படிப்பதற்காக கெலமங்கலம், ஓசூரிலே இரண்டு கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருந்தாலும், ராயக்கோட்டையில் ஒரு கல்லூரி தேவை என்று சொல்கிறார். ஓசூரில் தோற்றுவிக்கப்பட்ட அந்தக் கல்லூரியில் ஒப்பளிக்கப்பட்ட 400 இடங்களுக்கும் மாணாக்கர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, அதையெல்லாம் கருத்தில் கொண்டு, வரக்கூடிய காலகட்டங்களில் ராயக்கோட்டை பகுதியில் ஒரு கல்லூரி தேவையென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே, தமிழகத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலே நடைபெறக்கூடிய இந்த அரசானது பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.